டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண்
ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 6.05.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 263 - Madurai | Online Edition

# மேற்கு ஆசிய நெருக்கடிச் சூழ்நிலைக்குப் பிறகு, மொத்தம் சுமார் 84 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன

புது தில்லி, மே 5

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் சூழ்நிலைக்கு மத்தியில், மத்திய அரசு தொடர்ச்சியான தகவல்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இது தொடர்பாக, நேற்று முன்தினம் புதுதில்லி தேசிய ஊடக மையத்தில் ஒரு ஊடக சந்திப்பு நடைபெற்றது. இதில், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் மற்றும் வெளியுறவு அமைச்சகங்களின் அதிகாரிகள் பங்கேற்று, எரிபொருள் இருப்பு, கடல்சார் செயல்பாடுகள், அப்பகுதியில் உள்ள இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்படும் உதவிகள், மற்றும் முக்கியத் துறைகளில் நிலைத்தன்மையைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை வழங்கினர்.

இதன்படி, 2026-ஆம் ஆண்டு காரீப் பருவத்திற்கான உரத் தேவை 390.54 லட்சம் மெட்ரிக் டன்னாக வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையால் மதிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய நிலவரப்படி கையிருப்பு சுமார் 195.71 லட்சம் மெட்ரிக் டன்னாக (50%க்கும் மேல்) உள்ளது. இது, வழக்கமான அளவான சுமார் 33%-ஐ விடக் கணிசமான உயர்வாகும். இது, அரசின் மேம்பட்ட திட்டமிடல், முன்கூட்டிய கையிருப்பு மற்றும் திறமையான தளவாட மேலாண்மை ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

மாநிலங்களில் விநியோக நிலை தொடர்ந்து வலுவாக உள்ளது. 2026 மே 1 முதல் 3 வரையிலான காலகட்டத்திற்கு, தேவையளவை விட கையிருப்பு கணிசமாக அதிகமாக உள்ளது. யூரியாவின் தேவை 2.66 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்க, அதன்

கையிருப்பு 62.28 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், டிஏபி-யின் தேவை 0.85 லட்சம் மெட்ரிக் டன்னாக உள்ள நிலையில், அதன் கையிருப்பு 20.32 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், எம்ஓபி-யின் தேவை 0.22 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், கையிருப்பு 7.60 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், என்பிகே-யின் தேவை 1.16 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், கையிருப்பு 49.71 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், எஸ்எஸ்பி-யின் தேவை 0.55 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், கையிருப்பு 24.60 லட்சம் மெட்ரிக் டன்னாகவும் உள்ளது. நெருக்கடி நிலைக்குப் பிறகு, மொத்தமாக சுமார் 84 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் கையிருப்பில் சேர்க்கப்பட்டு உள்ளன. 2025 ஏப்ரலில் 21.89 லட்சம் டன்னாக இருந்த யூரியா உற்பத்தி, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கிட்டத்தட்ட 20.98 லட்சம் டன் உள்நாட்டு உற்பத்தியை எட்டியுள்ளது.

நெருக்கடி புவிசார் அரசியல் சூழல் இருந்தபோதிலும், வீட்டு உபயோக எல்பிஜி, வீட்டு உபயோக பிஎன்ஜி மற்றும் சிஎன்ஜி (போக்குவரத்து) ஆகியவை 100% விநியோகம் செய்யப்படுவதை அரசு உறுதி செய்துள்ளது. வணிக எல்பிஜியைப் பொறுத்த வரை, மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, மருந்து, எஃகு, வாகனம், விதை, விவசாயம் போன்ற துறைகளுக்கும் முன் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 2026 மார்ச் 2 மற்றும் 3 ஆம் தேதிகளில் உள்ள சராசரி தினசரி விநியோ கத்தின் அடிப்படையில், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான 5 கிலோ எஃப்டிஎல் (FTL) விநியோகமும் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

எல்பிஜி பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தையைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் அமலாக்க நடவடிக்கைகள் தொடர்கின்றன. நாடு முழுவதும், நேற்று முன்தினம் 1570-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டன. பொதுத்துறை எண்ணெய் சந்தை படுத்தல் நிறுவனங்கள் திடீர் சோதனைகளைத் தொடர்ந்து தீவிர படுத்தி வருகின்றன. மேலும், 349 எல்பிஜி விநியோகஸ்தர் களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேற்று முன் தினம் வரை 74 எல்பிஜி விநியோகஸ்தர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது நிலவும் புவிசார் அரசியல் சூழ்நிலையால் சமையல் எரிவாயு விநியோகம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வீடுகளுக்கு எல்பிஜி வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. எல்பிஜி விநியோக மையங்களில் எந்தவிதமான தட்டுப்பாடுகளும் பதிவாகவில்லை. வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டர்களின் விநியோகத்தை உறுதி செய்வதற்காக, பெரும்பாலான எல்பிஜி விநியோக மையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயங்கின.

சீர்திருத்தத்துடன் இணைந்த 10% ஒதுக்கீட்டையும் சேர்த்து, வணிகப் பயன்பாட்டிற்கான மொத்த எல்பிஜி ஒதுக்கீடு நெருக்கடிக்கு முந்தைய அளவுகளில் சுமார் 70% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2026 ஏப்ரல் மாதம் முதல், 23.58 லட்சத்திற்கும் அதிகமான 5 கிலோ எஃப்டிஎல் சிலிண்டர்கள் விற்பனை செய்யபட்டுள்ளன. ஏப்ரல் முதல், மொத்தம் 2,15,332 மெட்ரிக் டன் (113.33 லட்சத்திற்கும் அதிகமான 19 கிலோ எல்பிஜி சிலிண்டர்களுக்குச் சமம்) வர்த்தக எல்பிஜி சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில், பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களால் மொத்தம் 11,106 மெட்ரிக் டன் வாகன எல்பிஜி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2026 மார்ச் முதல், சுமார் 6.12 லட்சம் பிஎன்ஜி இணைப்புகளுக்கு எரிவாயு வழங்கப்பட்டுள்ளதுடன், கூடுதலாக 2.67 லட்சம் இணைப்புகளுக்கான உள்கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்த இணைப்புகளின் எண்ணிக்கை 8.79 லட்சமாக உயர்ந்துள்ளது.

மேலும், சுமார் 6.79 லட்சம் வாடிக்கையாளர்கள் புதிய இணைப்புகளுக்காகப் பதிவு செய்துள்ளனர். 03.05.26 வரை, 43,760-க்கும் மேற்பட்ட பிஎன்ஜி நுகர்வோர் தங்களது எல்பிஜி இணைப்பு களைத் திரும்ப ஒப்படைத்துள்ளனர்.

மேற்கு ஆசியப் பகுதியில் உள்ள இந்திய மாலுமிகளின் நலனுக்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. இந்தியத் தூதரகங்கள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் முகமைகளுடன் ஒருங்கிணைந்து இந்தியர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றன. இப்பகுதியிலிருந்து இந்தியாவின் பல்வேறு இடங்களுக்குக் கூடுதல் விமானங்கள் இயக்கப்படுவதால், ஒட்டுமொத்த விமானப் போக்குவரத்து நிலைமை தொடர்ந்து மேம்பட்டு வருகிறது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

நேற்றைய தொடர்ச்சி...

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?

**அருகம்புல் ஜூஸ்**

**தேவைப்படும் பொருள்கள்**

அருகம்புல் ஒரு கைப்பிடி அல்லது ஒரு ஸ்பூன் பொடி.

ரோஜா இதழ்கள் (ஒரு பூவின் இதழ்கள் அனைத்தும்.)

கேரட் துருவல் இரண்டு ஸ்பூன்

ஏலக்காய் தூள் ஒரு சிட்டிகை

மிளகு தூள் ஒரு சிட்டிகை

தண்ணீர் ஒரு கப் அல்லது தேங்காய் தண்ணீர் ஒரு கப் (200 மில்லி)



**செய்முறை**

அருகம்புலுடன் மேற்கண்ட அனைத்து பொருட்களையும் வைத்து நன்றாக மிக்ஸியில் அரைத்து ஒரு துணியில் இட்டு பிழிந்து சாறு எடுக்கவும். அத்துடன் தண்ணீர் அல்லது தேங்காய் தண்ணீர் சேர்ந்து கலந்து மிக சுவையாக சாப்பிடலாம்.

**பயன்கள்**

குடலில் உள்ள நச்சு கழிவுகளை வெளியேற்றுகிறது. ரத்தம் சுத்தி அடைகிறது. உடல் உஷ்ணத்தை குறைக்கும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# உர மூட்டையில் உள்ள அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்ய கூடாது

## வேளாண்மை துறை எச்சரிக்கை



பெரம்பலூர், மே 5

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன், பெரம்பலூர் வட்டாரத்தில் உரம் விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின் போது உரங்களை பிஓஎஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில், முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயியின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப் பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும்.

எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், உரங்களின் அதிகபட்ச விலை மாற்றப்பட்டிருந்தால், புதிதாக வரும் உரம் மூட்டைகளை தனியாக பராமரிக்க வேண்டும். பழைய உரம் மூட்டையை தனியாகவும் வைத்திருக்க வேண்டும். உரம் முட்டையில் அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும்,

எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் களைக்கொல்லி உடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை

பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு உதவி விவசாயிக்கு வழங்க வேண்டும், நானோ யூரியா, நானோ டி ஏ பி விவசாயிகளுக்கு எடுத்து கூறி பயன்படுத்த வேண்டும். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப் படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

## விதைப்பண்ணைகளை வறட்சியிலிருந்து பாதுகாக்க இளஞ்சிவப்பு நிறமியுடைய மெத்திலோ பாக்டீரியம் (பி.பி.எப்.எம்) பயன்படுத்த அறிவுறுத்தல்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலக் கடலை, எள், உளுந்து மற்றும் நெல் விதைப்பண்ணைகளை தற்போது நிலவி வரும் கோடை வறட்சியிலிருந்து பாதுக்காக்க விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

● இளஞ்சிவப்பு நிற மெத்திலோ பாக்டீரியா (PPFM – Pink Pigmented Facultative Methylotrophs) என்பது ஒரு திரவ உயிர் உரம். இது வறட்சியைத் தாங்கிபயிர்கள் வளரவும், மகசூலை அதிகரிக்கவும் பெரிதும் உதவுகிறது.

● இது பிபிஎப்எம் (பிங்க் பிக்மன்டட் பேகல்டேடிவ் மெத்தலோடிரோப்) என்றும் ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படுகின்றது.

● இப்பாக்டீரியாக்கள் மெத்தனால், மெத்தைல் அமீன், பார்மால்டிஹைடு மற்றும் கரியமில வாயுவை உட்கொண்டு உயிர் வாழக்கூடியவை.

● மெத்தைலோ பாக்டீரியா இலைகளில் இருப்பதால், இலை துவாரம் மூலம் வெளியாகும் மெத்தனாலை உணவாக உட்கொண்டு வாழ்கின்றது.

இதன் காரணமாக பிபிஎப்எம் வகை பாக்டீரியாக்கள் இலையின் மேற்பரப்பில் அதிக அளவு காணப்படுகின்றன.

**மெத்திலோ பாக்டீரியத்தின் பயன்கள்**

1. பயிரின் வளர்ச்சி ஊக்கிகளான ஆக்ஸின், ஜிப்ரலின் மற்றும் சைட்டோகைனின் உற்பத்தி செய்வதால் விதைகளின் முளைப்புத்திறன், நாற்றுகளின் வீரியம் மற்றும் வளர்ச்சி, செடிகளின் வளர்ச்சி போன்றவற்றை ஊக்குவிக்கின்றது.

2. ஏசிசி-டீ-அமினேஸ் என்ற நொதியின் மூலம் இடர்பாடான சூழலில் உருவாகும் எத்திலீன் அளவை குறைத்து பயிருக்கு வறட்சி தாங்கும் தன்மையை அளிக்கின்றது. தொடர் உபயோகிப்பால் நீர்ப்பாசனத்தின் எண்ணிக்கை குறைக்க உதவுகின்றது.

3. 10 சதவிகிதம் வரை பயிரின் மகசூலை அதிகரிக்கின்றது. பயிரின் வளர்ச்சி அதிகப்படுவதாலும், நொதிகளை உற்பத்தி செய்வதாலும், தழைச்சத்தின் உபயோகிப்புத் தன்மையை அதிகப் படுத்துகின்றது.

4. வறட்சி காலங்களில் இலைவழித் தெளிப்பு செய்வதால் மூன்று வாரங்கள் வரை பயிரின் பசுமைத்தன்மையை பாது காக்கின்றன.

**மெத்திலோ பாக்டீரியத்தை பயன்படுத்தும் வழிமுறைகள்**

1. சொட்டு நீர்ப் பாசன முறையில் அளிக்க ஏதுவானது.

2. இது அனைத்து வகைப் பயிர்களுக்கும் ஏற்றது.

3. அதிகாலை அல்லது மாலை வேளைகளில் மட்டுமே தெளிக்க வேண்டும்.

4. பொதுவாக ஒரு ஏக்கருக்கு 200 மி.லி பிபிஎப்எம் திரவத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

5. பயிர் வளர்ச்சியின் முக்கியமான நிலைகளில் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நவீன வேளாண்மையில் அங்கக வேளாண் சான்றளிப்புக்கான தேவைகள்

● பண்ணை முழுவதையும் குறிப்பிட்ட வருடத்திற்குள் அங்கக விவசாயத்திற்கு மாற்றுவதே சாலச் சிறந்தது.

● விதைகள் நடவுப் பொருட்களை அங்கக விவசாயப் பண்ணைகளிலிருந்தே வாங்குவது சிறந்தது. அங்கக விவசாய விதைகள் கிடைக்காவிட்டால் இராசாயனப் பொருட்களைக் கொண்டு நேர்த்தி செய்யாத விதைகளை முதன் முறை பயன் படுத்தலாம்.

● பண்ணையில் கால்நடை வளர்ப்பு பயிர் சுழற்சி முறை மூடாக்கு பயிர்கள் வளர்ப்பு பசுந்தாள் தீவனப் பயிர்கள் வளர்ப்பு ஊடு பயிர் - கலப்பு பயிர்கள் வளர்ப்பு மரங்கள் வளர்ப்பு போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

● தாவரங்கள், விலங்குகள் நுண்ணுயிர்களைத் தீயிட்டு கொளுத்தக் கூடாது. அதனை மறுசுழற்சி செய்து மண் வளத்தைப் பெருக்க வேண்டும்.

● மண்வளப் பாதுகாப்பு உத்திகளைக் கடைப்பிடித்து மண் அளிப்பதைத் தடுக்க வேண்டும். தகுந்த நீர் நிர்வாக முறை களைக் கடைப்பிடித்து நீர்வள ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டும்.

● விவசாயத்திற்காக காடுகளை அழிப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

● அண்டைத் தோட்டங்கள் அங்கக விவசாயமல்லாத தோட்டங் களாக இருப்பின், அத்தோட்டங்களில் இடப்படும் இரசாயன உரம், பூச்சி மருந்துகள் மூலம் மாசு ஏற்படுவதைத் தடுக்க 'காப்பு மண்டலத்தை' உருவாக்கிட வேண்டும்.

● நாற்றுகள் வளர்க்கவோ நாற்றங்களால் அமைக்கவோ பாலித்தீன் பொருட்களை உபயோகப்படுத்த நேரிட்டால் அவற்றின் உபயோகத்திற்குப் பிறகு அவற்றை மண்ணில் தீயிட்டு கொளுத்தக்கூடாது.

● விளைபொருட்களை கூடுமான வரை இடைத்தரகர்கள் இன்றி நுகர்வோரின் நம்பிக்கை மூலம் நேரடி விற்பனை செய்ய வேண்டும்.

● ஒரு பருவ பயிர் செய்யும் தோட்டங்களுக்கு அங்கக விவசாயம் தொடங்கிய தேதியிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரே சான்றளிப்பு வழங்கப்படும். பல பருவப் பயிர் களில் அங்கக விவசாயம் செய்து வரும் தோட்டங்களில் இதனை தகுந்த ஆதாரங்களுடன் நீருபிக்க முடியுமானால் சான்றளிப்பு நிறுவனம் இந்த மாறு காலத்தை குறைக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ முடியும்.

**ஆவண பராமரிப்பு**

● பண்ணை வரைபடம்

● பண்ணை விளைநிலங்களைக் குறிக்கும் கடந்த மூன்று ஆண்டுகளின் விபரங்கள்

● பண்ணையில் மேற்கொள்ளப்படம் செய்முறைகள்

● இடுபொருட்கள் பதிவேடு

● விளைபொருட்கள் பதிவேடு

● அறுவடைப் பதிவேடு

● சேமிப்புப் பதிவேடு

● சேமிப்புப் பதிவேடு

● விற்பனைப் பதிவேடு

● குறியீட்டு அட்டை குறித்த பதிவேடு

**சான்றளிப்பு நிறுவனம்** : சான்றிதழ் பெற விரும்பும் அங்கக வேளாண் உற்பத்தியாளர்கள் மத்திய வர்த்தக அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றளிப்பு நிறுவனத்தை தொடர்பு கொள்ள வேண்டும். அந்நிறுவனங்கள் விண்ணப்ப படிவம், கட்டண மற்றும் உற்பத்தி முறைகள் ஆய்வு மேலும் சான்றளிப்பு வழிமுறைகள் தண்டனைகள் மற்றும் மேல் முறையீடு குறித்த தகவல்களை அனுப்பி வைக்கும். உற்பத்தியாளர்கள் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அதனுடன் கடந்த 3 வருடங்களாக பண்ணையில் கடைபிடித்த மண் நீர் பூச்சி நோய்களை நிர்வாக முறைகள் பதப்படுத்தும் முறைகள் இடுபொருட்கள் விளை பொருட்களை பதிவு செய்யும் முறைகள் குறித்த தகவல்களையும் அனுப்ப வேண்டும்.

**தனிநபர் சான்றளிப்பு** : சான்றிதழ் பெற விரும்பும் தனிநபர் உற்பத்தியாளர்கள் நேரடியாக சான்றளிப்பு நிறுவனத்தை அணுகி சான்றளிப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். சான்றளிப்பு நிறுவனம் ஆய்வுக்குப் பின் சான்றிதழை தனிநபர் பெயரில் வழங்குகிறது. தனிநபர் சான்றளிப்பு எளிதானது. ஆனால் சான்றளிப்பு கட்டணம் அதிகம். தனிநபர் உற்பத்தியாளர்கள் சிறு விவசாயியாக இருக்கும் பட்சத்தில் அங்கக வேளாண் விளை பொருட்களின் அளவும் குறைவாக இருக்கும். ஆதலால் விளைபொருட்களை விற்பனை செய்வதில் பிரச்சனை ஏற்படுகிறது.

### குழு சான்றளிப்பு

விவசாய குழுக்கள் விவசாய சங்கங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் போன்றவை குழு சான்றளிப்பின் கீழ் வருகின்றது. குழுவில் உள்ள அங்கக விவசாயிகளின் சார்பில் குழுவானது சான்றளிப்பு நிறுவனத்தை அணுகி சான்றளிப்பு ஒப்பந்தம் செய்து கொள்கிறது. சான்றிப்பு நிறுவனம் ஆய்வுக்குப் பின் சான்றிதழை குழுவின் பெயரில் வழங்குகிறது.

தகவல் : ***யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேரராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.***



# அக்னி நட்சத்திர காலம் என்றால் என்ன? எப்படி இருக்கும்?




கோடையின் உச்சம் என்று சொல்லப்படும் ‘அக்னி நட்சத்திரம்‘ காலம் நேற்று முன்தினம், மே 4ல் தொடங்கியது. அக்னி நட்சத்திரம் என்றாலே சூட்டெரிக்கும் வெயில் காலம் தான். இதனை சித்திரை வெயில், கத்திரி வெயில் என பல்வேறு பெயர்களில் நாம் அழைத்து வருகிறோம்.

கத்திரி வெயில், நட்சத்திர வெயில் என்ற வார்த்தைகளை வானிலை ஆய்வு மையம் ஆதார பூர்வமாக பயன்படுத்த படுவதில்லை. இவை அறிவியல் பூர்வமான வார்த்தைகள் அல்ல. இவை ஜோதிட பஞ்சாங்கத்தின் படி அழைக்கப்படுகின்ற சொல்லாகும்.

கத்திரி வெயில் எப்போது தொடங்கும் எப்போது முடியும் என்பதை உறுதியாக சொல்ல முடியாது. ஜோதிட பஞ்சாங்கத்தின்படி ‘பரணி நட்சத்திரம் தொடங்கி கிருத்திகை நட்சத்திரம் வரையிலான சூரியனின் பயண காலமே இது.

### எப்போது தொடங்கும்?

பொதுவாக சித்திரை, வைகாசி மாதங்களில் பூமியானது சூரியனுக்கு அருகே செல்லுவதால் வெப்பம் கடுமையாக இருக்கும். அந்த வகையில் இந்த ஆண்டில் மே 4ல் தொடங்கி மே 28ம் தேதி வரை அக்னி நட்சத்திர காலமாகும். இந்த நாட்களில் வழக்கம் போல சூரியன் வெப்பத்தின் உச்சத்தில் இருக்கும்.

சூரியன் என்பது ஒரு நட்சத்திரம் தான் (STAR).

**அக்னி நட்சத்திரம் என்று ஏன் அழைக்கிறோம்?**

வெப்பம் அதிகரிக்கும் காலங்களில் நாம் அதற்கு நட்சத்திர அந்தஸ்து கொடுக்கிறோம். அதனால் தான் அக்னி நட்சத்திரம் என்று அழைக்கிறோம்.

**இந்த காலங்களில் 21 நாட்களில் வெப்பம் எப்படி இருக்கும்?**

இதில் முதல் 7 நாட்கள் (முன்னேழு) வெயில் சுமாராகவும் இடை 7 நாட்கள் வெயில் அதிகமாகவும் கடைசி 7 நாட்கள் (பின்னேழு) சுமாராகவும் இருக்கும்.

**கர்ப்ப ஓட்டம் என்றால் என்ன? எப்போது நிகழும்?**

பொதுவாக தை, மாசி மாதங்களில் அறுவடை செய்யப்பட்ட நிலங்கள் கடுமையான வெப்பத்தின் காரணமாக வெடிப்புகள் ஏற்படும். இது கரிசல் மண்ணில் அதிகமாக தென்படும், பாளம் பாளமாக வெடிப்புகள் உண்டாகும். இதிலிருந்து பூமியின் வெப்பம் வெளியேறும். இதில் இலைகள் நிலத்தில் உள்ள சருகுகள் உள்ளே புகுந்து விடும். அக்னி நட்சத்திர முடிந்த உடன் வைகாசி மாதத்தில் வீசும் காற்றால் பூமி குளிர்ந்து விடும்.அதனையொட்டி மழை பெய்வதால் பள்ளம் வெடிப்புகள் மூடப்படும். இதனை தான் 'கர்ப்ப ஓட்டம்' என்று புவி மேலாண்மை வல்லுநர் குறிப்பிடுகின்றனர்.

அந்த வகையில் இயற்கையாகவே நிலத்தின் வளத்தை அதிகரிக்க இந்த அக்னி நட்சத்திரம் உதவுகிறது என்றால் மிகையல்ல. எனவே அக்னி நட்சத்திர காலத்தை கண்டு பயப்பட வேண்டாம். தேவையில்லாமல் பீதியை கிளப்பி வேண்டாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# கனமழை, காற்றினால் பாதிக்கப்பட்ட பயிர்களை நேரில் ஆய்வு செய்த வேளாண் இணை இயக்குனர்



சேலம், மே 5

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் சமீபத்தில் பெய்த கனமழை மற்றும் வீசிய பலத்த காற்றினால் ஏற்பட்ட பயிர் பாதிப்புகளை, வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.


## வயல்வெளி ஆய்வு

தலைவாசல் வட்டாரத்திற்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் பயிர்கள் சேதமடைந்திருப்பதாக வந்த புகாரைத் தொடர்ந்து, இணை இயக்குனர் தலைமையில் அதிகாரிகள் குழுவினர் தீவிர கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டனர். குறிப்பாக, இலுப்பநத்தம், லத்துவாடி, வெள்ளையூர், காமக்காபாளையம், வீரகனூர் – தலைவாசல் ஆகிய பகுதிகளில் நேரடியாக வயல்களுக்குச் சென்று பயிர்களின் சேத விவரங்களை அதிகாரிகள் கேட்டறிந்தனர்.

## பங்கேற்ற அதிகாரிகள் குழு

இந்த ஆய்வின் போது வேளாண்மைத் துறையின் முக்கிய அதிகாரிகளான துணை இயக்குனர்கள் – கண்ணன் (மத்திய திட்டம்) மற்றும் நீலாம்பாள் (மாநில திட்டம்) உடனிருந்தனர். வேளாண் அலுவலர் சுதாகர். வேளாண் உதவி இயக்குனர் ஜானகி மற்றும் துணை வேளாண் அலுவலர் மணவழகன் ஆகியோர் ஆய்விற்கான ஏற்பாடு களைச் செய்திருந்தனர்.

மேலும், இந்த ஆய்வில் தலைவாசல் வட்டார வருவாய்த்துறை அலுவலர்களும், பிற வட்டாரங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட வேளாண்மைத் துறை அலுவலர்களும், அட்மா திட்ட அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டனர். தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளதால், பயிர்களைப் பாதுகாக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரிகள் ஆலோசனைகளையும் வழங்கினர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதியில் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள்

காவிரி டெல்டா பகுதி தமிழ்நாட்டின் "நெற்க்கின்னம்" என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதி நீர்வளம், செழிப்பான நிலம் மற்றும் பாரம்பரிய விவசாய அறிவு ஆகியவற்றால் புகழ் பெற்றது. ஆனால், சமீபத்திய காலங்களில் நீர் பற்றாக்குறை, நிலச்சரிவு, செலவு உயர்வு மற்றும் விளைச்சல் குறைவு போன்ற சவால்கள் உருவாகியுள்ளன. இந்நிலையில், ஒருங்கிணைந்த பண்ணைய முறை ஒரு நிலையான தீர்வாகத் திகழ்கிறது. இது நிலம், நீர், கால்நடை, மீன் வளம், மரக்கன்றுகள், பசுமை உரம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து உயர் உற்பத்தி மற்றும் வருமானத்தை உருவாக்கும் முறையாகும். காவிரி டெல்டா பகுதியின் நில அமைப்பு மற்றும் விவசாய சூழல் காவிரி, கொள்ளிடம், மணிமுத்தாறு, வலங்கை நதிகள் இப்பகுதிக்கு நீர் வழங்குகின்றன.

**முக்கிய மாவட்டங்கள்**

திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர்.

**நில வகைகள்**

கரிசல் நிலம், மணல் கலந்த சிதைவு மண், வளமான அலுவியல் மண்.

**முக்கிய பயிர்கள்**

நெல், கரும்பு, பசுந்தாணியம், பசலைக்கீரை, வாழை, காய்கறிகள்.

இப்பகுதி தண்ணீரை அடிப்படையாகக் கொண்ட நீர் நில விளைச்சல் மண்டலம் என்பதால் ஒருங்கிணைந்த பண்ணையம் இங்கு அதிகம் பொருந்தக்கூடியது. ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியக் கருத்து ஒருங்கிணைந்த பண்ணையம் என்பது "ஒரே நிலத்தில் பல்வேறு விவசாய மற்றும் பாசனத் துறைகளை இணைத்து, இயற்கை வளங்களின் சிறந்த பயனீடு மூலம் அதிக வருமானம் மற்றும் நிலைத்தன்மை பெறும் முறை".

**இதன் நோக்கம்**

- விவசாயியின் பொருளாதார நிலை உயர்த்துதல்
- நிலம் மற்றும் நீரின் திறமையான பயன்பாடு
- பசுமை ஆற்றல் மற்றும் உயிர் வளங்களின் பாதுகாப்பு
- சுற்றுச்சூழல் சமநிலை பேணுதல்

காவிரி டெல்டா பகுதியில் நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த பண்ணைய வகைககள்

**1. நெல் + மீன் வளர்ப்பு முறை**

- நெல் வயலில் நீரை நிரப்பி அதில் கார்ப், மிர்கால் போன்ற மீன்களை வளர்ப்பது.
- நெல் வயல் பூச்சிகள் குறைகின்றன.
- மீன் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கிறது.
- இயற்கை உரமாக மீன் கழிவுகள் பயன்படுகின்றன.

**2.நெல் + வாத்து வளர்ப்பு**

- வாத்துகள் பாசனநீரில் பூச்சிகளைத் தின்று வயலின் உயிர்ச்சூழலை சமநிலைப் படுத்துகின்றன.
- வாத்து முட்டை மற்றும் இறைச்சி வருமானம்.

**3.நெல் + மாடு / ஆடு வளர்ப்பு**

- மாடுகளின் சாணம் மற்றும் சிறுநீர் இயற்கை உரமாகப் பயன்படுகிறது.
- பூச்சிக்கொல்லிகள் தேவையில்லை.
- பால் மற்றும் பசும்பால் பொருட்கள் மூலம் வருமானம்.

**4. மீன் + இறால் + நண்டு**

ஒருங்கிணைந்த அக்வாகல்ச்சர்

- கடலோர பகுதிகளில் உப்பு நீர் குளங்களில் ஒருங்கிணைந்த வளர்ப்பு.
- உற்பத்தி சீராகவும் லாபம் அதிகமாகவும் கிடைக்கிறது.
- நெல் வைக்கோல் கால்நடைகளுக்குப் போாக்கு.

**5. விவசாயம் + தோட்டக்கலை + மரவளர் ஒருங்கிணைந்த பண்ணையம்**

- நெல்/கரும்பு/திணை + மரக்கன்றுகள் (மாவு, வேம்பு, சிட்டுக் காடு) – நீண்டகால வருமானம் மற்றும் நிலத்தின் ஆரோக்கியம் பேணப்படுகிறது.

### பொருளாதார நன்மைகள்

● ஒருங்கிணைந்த பண்ணையம் இரட்டிப்பு வருமானம் தரும் திறன் கொண்டது.
● ஒரு ஏக்கரில் வருடாந்திர வருமானம் ரூ. 1.5 லட்சம் வரை உயரும்.
● தொழிலாளர் தேவை அதிகரிப்பதால் கிராமப்புற வேலை வாய்ப்பு உருவாகிறது.
● பொருளாதார அபாயம் குறைகிறது (ஒரு துறை தோல்வி யடைந்தாலும் மற்ற துறைகள் ஆதரிக்கின்றன).

### சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தன்மை

● ஒருங்கிணைந்த பன்னையம் சுற்றுச்சூழலுக்கு நன்மை பயக்கும் பசுமை முறை ஆகும்.
● குடும்ப அடிப்படையில் நிலைத்த வாழ்க்கை முறையை உருவாக்குகிறது.
● வேதிப்பொருட்களின் பயன்பாடு குறைவு.
● இயற்கை உரங்கள், கம்போஸ்ட், பசுந்தை பயன்பாடு.
● நிலத்தின் உயிர்ச்சத்து அதிகரிப்பு.

### அரசு திட்டங்கள் மற்றும் ஆதரவுகள்

● தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு பல திட்டங்கள் மூலம் IFSஐ சமநிலைப் படுத்துகின்றன.
● நீர் சேமிப்பு மற்றும் நிலத்தடி நீர் புதுப்பிப்பு ஊக்குவிக்கின்றன.

### சவால்கள் மற்றும் தீர்வுகள்

● NMSA (National Mission on Sustainable Agriculture)
● RKVY (Rashtriya Krishi Vikas Yojana)
● TNIAMWARM Project
● விவசாயிகள் பயிற்சி மையங்கள் (KVKs) வழியாக ஒருங் கிணைந்த பண்ணையப் பயிற்சிகள்.

### நீர் பற்றாக்குறை

● தொழில்நுட்ப அறிவு குறைவு
● சந்தை அணுகல் சிரமம்
● சிறு நிலக்காரர்கள் முதலீடு குறைவு
● தண்ணீர் சேமிப்பு தொழில்நுட்பங்கள் (drip, sprinkler)
● பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்
● கூட்டுறவு சந்தைப் படுத்தல் மையங்கள்
● அரசு நிதி உதவி மற்றும் கடன் வசதிகள்

காவிரி டெல்டா பகுதி தமிழ்நாட்டின் உணவு வளத்தின் மையமாக இருந்தாலும், சீரான நீர் ஆதாரம் மற்றும் நிலத்தன்மை சவாலாகி உள்ளது. இந்நிலையில் ஒருங்கிணைந்த பண்ணைய முறை சிறந்த மாற்று வழியாக விளங்குகிறது. இது விவசாயியின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது. “ஒரு நிலத்தில் பல வாழ்க்கைகள்-ஒரு விவசாயத்தில் பல வாய்ப்புகள்” என்பதே ஒருங்கிணைந்த பண்ணையத்தின் சாரம். இதன் பரவ லான நடைமுறைகள் காவிரி டெல்டா பகுதியை மீண்டும் வளமான மற்றும் நிலையான பசுமை மண்டலமாக மாற்றும் திறன் கொண்டது.

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப்பேராசிரியர் (துவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்) ரா.அபிநயா, ம.பாமா (இளங்கலை வேளாண் மாணவி), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***



# பூச்சிகளைப் கட்டுப்படுத்துவதில் இனக்கவர்ச்சி பொறிகளின் பங்கு

பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் இனக்கவர்ச்சி பொறிகள் மிக முக்கியமான இயற்கை முறையாக விளங்குகின்றன. இவை ரசாயன மருந்துகளுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**இனக்கவர்ச்சி பொறிகளின் அடிப்படைத் தத்துவம்**

● இனக்கவர்ச்சி பொறிகள் பூச்சிகளின் இயற்கை இனப் பெருக்க நடத்தைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டவை. பெண் பூச்சிகள் சுரக்கும் ஃபெரோமோன் எனும் வாசனைப் பொருளைப் பயன்படுத்தி ஆண் பூச்சிகளைக் கவர்ந்து இழுக் கின்றன. இதன் மூலம் பூச்சிகளின் இனப்பெருக்கம் தடுக்கப் படுகிறது.

● இந்தப் பொறிகள் பெண் பூச்சியின் வாசனையைத் தழுவி செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட லெமினேன் அல்லது ஜெல் வடிவிலுள்ள ஃபெரோமோன்களைப் பயன்படுத்துகின்றன. ஆண் பூச்சிகள் இந்த வாசனைக்கு ஈர்க்கப்பட்டு பொறியில் விழுவதன் மூலம் அழிக்கப்படுகின்றன அல்லது சேகரிக்கப்படு கின்றன.

● ஒரு ஆண் பூச்சி அழிக்கப்படும்போது, 200-300 புழுக்கள் உற்பத்தி தடுக்கப்படுகிறது. இது பயிர்ச் சேதத்தைக் குறைக்கும் சிறந்த முறை.

**பூச்சிக் கட்டுப்பாட்டில் பங்கு**

● பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், தாக்குதலை முன்னறிவதற்கும் இனக்கவர்ச்சி பொறிகள் உதவுகின்றன. தினமும் 2-5 பூச்சிகள் ஒரு பொறியில் விழுவதன் மூலம் பூச்சி அளவைக் கணிக்கலாம்.

● இவை குறிப்பாக காய்கறி, பந்தல் பயிர்கள், நெல், பயறு வகைகளைத் தாக்கும் பூச்சிகளான அமெரிக்கன் காய்ப்புழு, தக்காளி பழ துளைப்பான், தண்டு துளைப்பான் போன்ற வற்றைக் கட்டுப்படுத்துகின்றன. ரசாயன மருந்துகளை விட இது சூழலை மாசுபடுத்தாது.

● பெண் பூச்சிகள் ஆணுடன் சேராமல் கருவுறா முட்டைகள் இடுவதால் புழு உற்பத்தி நின்று விடுகிறது. இதனால் பயிர் மேலாண்மை செலவு குறையும்.

**பொறிகளின் வகைகள்**

● புனல் வடிவ இனக்கவர்ச்சி பொறி காய்கறி புழுக்களைக் கட்டுப்படுத்த பயன்படுகிறது. இது ஆண் பூச்சிகளை கவர்ந்து பாலிதீன் பையில் சேகரிக்கிறது.

● விளக்குப் பொறிகள், மஞ்சள் ஒட்டும் அட்டைப் பொறிகள் ஆகியவை இனக்கவர்ச்சியுடன் இணைந்து பயன்படுத்தப் படலாம். ஃபெரோமோன் சிமிழ்கள் 30-40 மீட்டர் இடை வெளியில் வைக்கப்படுகின்றன.

● ஒரு ஏக்கருக்கு 5-12 பொறிகள் போதும். கண்காணிப்புக்கு 2 பொறிகள் சுமார்.

**நன்மைகள் மற்றும் பயன்பாடு**

● சுற்றுச்சூழல் மாசு இல்லை, நன்மை செய்யும் பூச்சிகளுக்கு பாதிப்பில்லை, எதிர்ப்புத் தன்மை உருவாகாது. காய்கறிகளுக்கு பூச்சிக்கொல்லிகள் தேவையில்லை.

● இவற்றை வயலில் ஆங்காங்கே 1-1.5 மீட்டர் உயரத்தில் வைக்கவும். ஃபெரோமோன் மாற்ற 4-6 வாரங்களுக்கு ஒரு முறை.

● தோட்டக்கலைத் துறை, வேளாண் பல்கலைக்கழகங்கள் இவற்றைப் பரிந்துரைக்கின்றன. உடுமலை, தஞ்சாவூர் போன்ற இடங்களில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பயன்பாட்டு முறைகள்**

● பயிர் தொடங்கும் முன் பொறிகளை வைக்கவும். தினசரி பூச்சிகளை எண்ணி பதிவு செய்யவும். தாக்குதல் அதிகமானால் இயற்கை மருந்துகளுடன் இணைக்கவும்.

தகவல் : *முனிசா.மா, மதுரஞ்சனா.ஜெ, பசுபதி.இ, கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, மதுரை 625 532.*

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# பருத்தியில் அடர் நடவு சாகுபடி முறை

வெள்ளைத் தங்கம் எனவும், நார்ப் பயிர்களின் அரசன் எனவும் பெருமையுடன் அழைக்கப்படும் பருத்தி தமிழ் நாட்டின் முக்கிய பணப்பயிராகும். பருத்தி சாகுபடியில் உயர் விளைச்சலும், கூடுதல் வருமானமும் பெற்று அதிக இலாபகரமானதாக மாற்ற புதிய தொழில்நுட்பமான அடர், நடவு சாகுபடி முறை விவசாய பெருமக்கள் கடைப்பிடிக்கலாம். இம்முறையில் 100 X 10 செ.மீ என்ற இடைவெளியில் ஒரு ஏக்கருக்கு 40,000 செடிகள் எண்ணிக்கையில் பவர் டில்லர் உதவியுடன் சாகுபடி செய்யலாம். இயந்திரங்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் 60ஒ15 செ.மீ இடைவெளியிலும் ஏக்கருக்கு 44,444 செடிகள் சாகுபடி செய்-யலாம். அடர் நடவுப் பருத்திக்கு பக்கக் கிளைகள் இ;ல்லாமல் நேராக வளரக்கூடிய இரகங்கள் உகந்ததாகும்.

கோ 17 இரகம் நேராகவும், பக்கக்கிளை இல்லாமல் அடக்க மானதாக வளர்வதோடு குறுகிய காய்க் கிளைகளையும், சுமார் 5 கிராம் அளவில் பெரிய காய்களை உடையதாகவும் இருக்கும். ஒரு செடியில் சுமார் 15 முதல் 20 காய்கள் வரை காய்க்கும். இதன் கூடுதல் சிறப்பு அம்சங்கள் யாதெனில் குறைந்த வயதும் (135 நாட்கள் வரை), ஒரே சமயத்தில் காய்கள் முதிர்ச்சியடைவதும் ஆகும். இதனால் பருத்திப் பஞ்சு சீராக ஒரே நேரத்தில் வெடிப்பதால், வேலையாட்களின் செலவைக் குறைத்து நேரத்தையும் மிச்சப்படுத்தலாம். இந்த இரகத்தை கொண்டு அடர் நடவு சாகுபடி முறையில் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 1835 கிலோ அளவில் விளைச்சல் கிடைக்கும்.

அடர்நடவு சாகுபடி முறையில் கூடுதலாக பயிர் எண்ணிக்கை உள்ளதால் இறவை பருத்திக்கான பொதுவான உர அளவு பரிந்துரையை விட 25 சதவிகிதம் அதிகமாக ஏக்கருக்கு 40:20:20 என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து உரத்தை இடவேண்டும். மேலும், நல்ல விளைச்சல் பெற வேண்டுமானால் தரமான முளைப்புத்திறன் கொண்ட விதைகளை பயன்படுத்துதல் அவசியம். பஞ்சு நீக்கிய மற்றும் பஞ்சு நீக்காத இரக பருத்தி விதைக்கு 65 சதவீதம் முளைப்புத்திறன், 98 சதவீதம் புறத் தூய்மை, அதிகபட்சம் 10 சதவீதம் ஈரப்பதம் இருத்தல் வேண்டும். விதைகளின் முளைப்புத்திறன் அறிய விரும்பும் விவசாயிகள் திருநெல்வேலி விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் ரூபாய் 80/- கட்டணம் செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து கொள்ள திருநெல்வேலி விதைப்பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் ஜெ.பி.சஜிதா கேட்டுக் கொள்கிறார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# காலநிலை மாற்றமும் பூச்சிகளும் : சிறிய உயிர்கள், பெரிய தாக்கம்

அறிமுகம்

பூச்சிகள் சிறியதாக இருந்தாலும், இயற்கையின் சமநிலையை பேணுவதில் அவற்றின் பங்கு மிகப் பெரியது. பயிர்களுக்கு தூளித்தூவல் (pollination) செய்யுதல் முதல் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துதல் வரை பல முக்கிய பணிகளை அவை செய்கின்றன. ஆனால் இன்று காலநிலை மாற்றம் "உயரும் வெப்பநிலை, மழைப்பொழிவு மாறுபாடு, கடுமையான வானிலை" பூச்சிகளின் வாழ்க்கையை வேகமாக மாற்றி வருகிறது. இந்த மாற்றங்கள் பூச்சிகளுக்கு மட்டும் அல்ல, விவசாயம், உயிரியல் பல்வகைமையும், மனித ஆரோக்கியத்தையும் பாதிக்கின்றன.

**அதிகரிக்கும் வெப்பநிலை மற்றும் பூச்சி வளர்ச்சி**

வெப்பநிலை அதிகரிப்பதால் பூச்சிகளின் வளர்ச்சி வேகம் கூடுகிறது. அவை விரைவாக இனப்பெருக்கம் செய்து, ஒரு ஆண்டில் பல தலைமுறைகளை உருவாக்குகின்றன. இதனால் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து, பயிர்களுக்கு அதிக சேதம் ஏற்படலாம்.

**பூச்சிகளின் பரவல் பரப்பு விரிவடைதல்**

காலநிலை மாற்றத்தால், முன்பு வாழ முடியாத பகுதிகளுக்கும் பூச்சிகள் பரவி வருகின்றன. குறிப்பாக சூடான பகுதிகளில் வாழும் பூச்சிகள் இப்போது குளிரான பகுதிகளிலும் காணப்படுகின்றன. இது விவசாயிகளுக்கு புதிய சவால்களை உருவாக்குகிறது.

**தூளித்தூவல் பூச்சிகளின் பாதிப்பு**

தேனீக்கள் மற்றும் வண்ணத்துப்பூச்சிகள் போன்ற தூளித் தூவல் பூச்சிகள் காலநிலை மாற்றத்துக்கு மிகவும் உணர்வு உள்ளவை. செடிகளின் மலர்ச்சி நேரமும் பூச்சிகளின் செயல்பாடும் ஒத்துப்போகாமல் போகும் போது, தூளித்தூவல் குறைகிறது. இதனால் பயிர் விளைச்சல் குறையும் அபாயம் உள்ளது.

### நோய் பரப்பும் பூச்சிகள் அதிகரிப்பு

வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் அதிகரிப்பதால் கொசுக்கள் போன்ற நோய் பரப்பும் பூச்சிகள் அதிகரிக்கின்றன. டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் புதிய பகுதிகளுக்கும் பரவும் அபாயம் உருவாகிறது.

### கடுமையான வானிலை நிகழ்வுகளின் தாக்கம்

வெள்ளம், வறட்சி, புயல் போன்ற கடுமையான வானிலை மாற்றங்கள் பூச்சிகளின் வாழிடங்களை பாதிக்கின்றன. சில பூச்சிகள் அழிவதற்கும், சில (குறிப்பாக தீங்கு விளைவிப்பவை) அதிகரிப்பதற்கும் வழிவகுக்கிறது. இதனால் இயற்கை சமநிலை குலைகிறது.

**முடிவுரை :** காலநிலை மாற்றம் பூச்சிகளின் உலகத்தை பலவிதமாக மாற்றுகிறது. சில பூச்சிகள் அதிகரிக்கின்றன. ஆனால் பல பயனுள்ள பூச்சிகள் குறைந்து வருகின்றன. இது விவசாயம், சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கியத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

“சிறிய பூச்சியும் இயற்கையில் பெரிய பங்கு வகிக்கிறது”.

கட்டுரை ஆசிரியர் : *ச.பூர்ணிமா, M.Sc. (Agri)., உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), பயிர்பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : poorny29@gmail.com.*



**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396